முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் சேதுமுனிவர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

**அரங்கரின் உபதேச மகிமை**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

08.04.2019, திங்கட்கிழமை

1. **தவராசனே தரும பலமாக**
**தரணி காத்திடும் ஆறுமுக அரங்கனே**
**புவனம் உன் கொள்கை வழி**
**புதுமை காணும் எனக் கூறி**

2. கூறியே நித்ய பிரசன்ன ஆசி
குறையிலா **விளம்பி சேல் திங்கள்**
**தெரியவே இருபானை திகதி சோமவாரம்**
**(விளம்பி வருடம் பங்குனி மாதம் 25ம் நாள் 08.04.2019, திங்கட்கிழமை)**
**தேசிகனுக்கு சேது முனிவர் யானும்**

3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான அரங்கன் சொன்ன
ஞான விளக்கங்கள் அனைத்தும்
நாட்டை வழிநடத்தும் வேதமாக

4. வேதமாக சிறந்து காத்திடும்
வினை போக்கி கலிவாழ் மக்களை
ஆதரவாக அணுகி மீட்டிடும்
ஆன்ம பலம் அடையச் செய்து

5. செய்துமே வாழும் மக்களை
செந்தூரான் வழிபாட்டில் நிலைத்து
மெய்ஞானம் அடையச் செய்யும்
மேலான பதவி நிலை தந்தும்

6. தந்துமே அரங்க ஞானியாரின்
தன்னார்வ தொண்டர்களாக்கி
சிந்தை தெளிவும் சிறப்பறிவும்
சுப்பிரமணியர் அருளும் பெறச் செய்யும்

7. செய்யவே அரங்கனாக ஆறுமுகன்
சேவை ஆற்றுகின்ற சூட்சும
மெய்நிலையும் அறிந்து தெளிந்து
முழுமை ஞானம் பெறச் செய்யும்

8. செய்யவே அரங்கனே குரு
சுப்பிரமணியர் ஞான ஆட்சி தரும்
மெய்ஞான பலமே தேசிகன்
மேலவர்கள் அடையாளம் கண்டு வியந்த

9. வியந்த ஞானியே அரங்கன்
வேலவன் அதிசூட்சும அவதாரம்
தயவு கொண்டு நடந்து
தருமம் செய்து வரும் மக்களே

10. மக்களே அரங்க மகானின்
மகத்துவம் வல்லமை அறிய நேரும்
தேக்கமிலா ஆசான் முருகன்
திருவருளை குருவருளாகத் தரும்

11. தரும் அற்புதம் உயர்பலம்
தமிழகத்தில் வேறெங்குமில்லையப்பா
ஆறுமுகா அரங்கா என அழைக்க
அக்கணமே அணுகி சித்தி கிட்டிடும் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் சேதுமுனிவர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

அளவற்ற தவங்களை செய்திட்ட தவராசனே உலகினை தருமத்தின் பலம் கொண்டு காத்து நிற்கின்ற அரங்கமகா தேசிகனே, உலகம் உமது அற்புத ஞானக் கொள்கைகள் மூலமாக புதுமையைக் காணுமப்பா என்றே அரங்கா உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் பங்குனி மாதம் 25ம் நாள் 08.04.2019, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே சேதுமுனிவர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சேதுமுனிவர்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனார் கூறிய ஞான விளக்கங்கள் யாவும் நாட்டை வழி நடத்தும் வேதங்களாகும். அவை நாட்டினை வழிநடத்தி சிறப்பாக காத்திடும். கலியுகத்தினில் வாழ்கின்ற மக்களின் வினைகளைப் போக்கி அவர்களை ஆதரவாக அணுகி காத்திடவே அவர்களை மீட்டு ஆன்மபலம் அடையச் செய்து மக்களை திருச்செந்தூரான் முருகப்பெருமான் வழிபாட்டினில் வரச்செய்து முருகப்பெருமானை தொடர்ந்து வழிபடச் செய்து அவர்களெல்லாம் முருகப்பெருமானின் கருணைக்கு ஆளாக்கி அவர்களை மெய்ஞானம் அடையச் செய்யும் வல்லமைகள் மிக்கதாகும் அரங்கன் கூறும் அருள் உபதேசங்கள்.

அரங்கனின் உபதேசங்கள் எல்லாம் வேதங்கள். அவை முருகப்பெருமானின் அருளைப் பெற்று தருவதோடு மெய்ஞானமும் தந்தருளி மேலான பதவிகளையும் பட்டங்களையும் தந்தும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தன்னார்வம்மிக்க தொண்டர்களாகவும் மாற்றி கடைப்பிடிப்போர்க்கு அறிவில் தெளிவும் எண்ணங்களில் தெளிவும் தூய்மையும் தந்து சிறப்பறிவினை உண்டாக்கி முருகப்பெருமானின் அருளையும் பெறச் செய்யும் வல்லமைமிக்க வேதங்களாகும்.

மேலும் அரங்கனின் உபதேசங்கள் எல்லாம் முருகப்பெருமானின் அருளைப் பெறச் செய்வதோடு முருகப்பெருமானே இக்கலியுகத்தினை மாற்றிட அரங்கனாக அவதாரம் செய்துள்ளதின் சூட்சுமங்களையும் முருகனே அரங்கனாகி இவ்வுலகோர்க்கு சூட்சுமத்தில் நின்று சேவையாற்றும் அற்புத பாங்கையும் அதன் உண்மை நிலையையும் அறிந்து தெளிந்து அரங்கனே முருகன் என்பதையும் முருகனே அரங்கன் என்பதையும் முழுமையாக உணரச் செய்து முழுமை ஞானம்தனையும் பெறச் செய்திடும் வல்லமைமிக்க உபதேசங்களாகும்.

உத்தம மகா ஞானி அவதார ஞானி முருகப்பெருமானின் சூட்சும அவதாரமாக சிவகுருநாதன் முருகனின் அவதாரமாக வந்திட்ட இவ்வுலகின் ஒப்பற்ற ஞானசற்குரு அரங்கமகா தேசிகன் ஒருவரே ஆவார். அத்தகைய ஞானகுரு அரங்கமகான் மட்டுமே இவ்வுலகினில் முருகப்பெருமானின் ஞானஆட்சியை உருவாக்கும் ஒப்பற்ற சக்தி ஆவார். முருகப்பெருமானின் ஞான ஆட்சியை தரவல்ல ஒப்பற்ற ஆதார பலமே அரங்கமகா தேசிகன் ஆவார். உலக ஞானிகளெல்லாம் வியந்து போற்றும் மகா ஞானியே அரங்கமகா தேசிகன் ஆவார்.

முருகப்பெருமானின் அவதார ஞானி அரங்கரின் தயவைப் பெற்று தருமங்களை செய்து வருகின்ற மக்களே அரங்கமகா தேசிகனாரின் மகத்துவங்களை, வல்லமைகளை அறிந்திட முடியும்.

முருகப்பெருமானின் திருவருளை தடையின்றி குருஅருளாக தருகின்ற உண்மை ஞானகுரு அரங்கனைப் போல அற்புத ஞானியும், உயர் பலம் தரும் குருவும் இவ்வுலகினில் வேறெங்கும் இல்லையப்பா.

**ஆறுமுகா, அரங்கா, ஆறுமுக அரங்கமகா தேசிகா என்றே மனம் உருகி அரங்கனை அழைக்க அக்கணமே அரங்கன் அருள் அவர்களை அணுகி சித்திகளை தந்தருளும்** எனக் கூறுகிறார் மகான் சேதுமுனிவர்.

–சுபம்–